**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

STC **.No.** 1025/2023

**2026 – ம் ஆண்டு மே மாதம் 19–ம் தேதி செவ்வாய்க்கிழமை எ.ம.சா. 3– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **எ.ம.சா.** : 3 | | | |
| **பெயர்** | : **மணிகண்டன்** | **தொழில்** | : **சிட்டி யூனியன் வங்கி மேனேஜர்** |
| **த/பெ.** | : **ஆசைதம்பி** | **வட்டம்** | : பெரம்பலூர் |
| **கிராமம்** | : பெரம்பலூர் | **வயது** | : 43 |

<u>19.05.2026</u>

**( புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர் இல்லை எதிரி தரப்பில் BNSS பிரிவு 3–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது )**

முதல் விசாரணை

நான் தற்போது பெரம்பலூரில் வசித்து வருகிறேன். நான் கடுகூர் சிட்டி யூனியன் வங்கியில் மேனேஜராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் சக்திவேல், த/பெ. கலியபெருமாள் என்பவர் எங்கள் வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளார். அவருடைய வங்கி கணக்கு எண்.500101012395493. அவர் தன்னுடைய வங்கி கணக்கிலிருந்து 12.11.2022 அன்று ரூ. 6000/– பணத்தை ஜீபே மூலமாக முத்து என்பவருக்கு அனுப்பியுள்ளார். 06.12.2022 அன்று ரூ. 2000/– பணத்தை ஜீபே மூலமாக முத்து என்பவருக்கு அனுப்பியுள்ளார். இதற்கான ஆவணங்களை தற்போது நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். சக்திவேல் என்பவருடைய வங்கி கணக்கின் ஸ்டேட்மன்ட் முதல் பக்கம் மற்றும் மேற்படி ஜீபே பரிவர்த்தனைகளின் ஸ்டேட்மன்ட்

எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( புகார்தாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த ஆவணங்கள் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாததது என ஆட்சேபனை செய்கிறார்).

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

2023–ம் வருடம் மார்ச் மாதம் மற்றும் அதற்கு பின்னே உள்ள பரிவர்த்தனைகள் பற்றி நான் முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். முத்து என்பவர் யார் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். முத்து என்பவரின் வங்கி கணக்கு மற்றும் மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை**

இல்லை.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.